செ. கு. எண்: 251 நாள் : 19.09.2013

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை –19.9.2013

நாகப்பட்டினம் மாவட்டம், மருங்கூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. ஞானசேகரன் என்பவர் 15.8.2013 அன்று மருங்கூர் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியில் மின்சாரம் தாக்கியதில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

அரியலூர் மாவட்டம், உடையார்பாளையம் வட்டம், கோவிந்தபுத்தூர் கிராமம், அருள்மிகு மாரியம்மன் திருக்கோவிலில் 16.8.2013 அன்று திரு. சொக்கலிங்கம் என்பவரின் மகன் அன்பழகன் மின்சாரம் தாக்கியதில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

17.8.2013 அன்று விழுப்புரம் மாவட்டம், மேல்காரணை கிராமம், அருள்மிகு ஸ்ரீஅய்யனாரப்பன் சுவாமி திருவீதி உலா ஊர்வலத்தின் போது, திரு. கன்னியப்பன் என்பவர் மீது மின்சாரம் தாக்கியதில் மயக்கமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சென்னை, கொருக்குப்பேட்டையைச் சேர்ந்த திரு. ராயப்பன் என்பவரின் மகன் பாலு 24.8.2013 அன்று சாலை ஓரத்தில் அறுந்து கிடைந்த மின்சார ஒயரை மிதித்ததில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி வட்டம், கோரணப்பட்டு மதுரா பேய்க்காநத்தம் கிராமத்தைச் சேர்ந்த திரு. ஹரிகிருஷ்ணன் என்பவரின் மகன் சிறுவன் சூர்யா 30.8.2013 அன்று வீட்டின் அருகே அறுந்து கிடந்த மின்சார வயரை மிதித்ததால் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தான் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்தத் துயர சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

விழுப்புரம் மாவட்டம், மேல்காரணை கிராமம், அருள்மிகு ஸ்ரீஅய்யனாரப்பன் சுவாமி திருவீதி உலா ஊர்வலத்தின் போது மின்சாரம் தாக்கியதில் திரு. காமராஜ் என்பவர் பலத்த காயமடைந்துள்ளார் என்பதை அறிந்து நான் மிகுந்த வருத்தமடைந்தேன்.

இந்த துயரச் சம்பவங்களில் உரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபாயும், மின்சாரம் தாக்கியதில் காயமடைந்த திரு. காமராஜுக்கு 25,000/- ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு:
இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9